# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 27 திங்கட்கிழமை 13.10.2025 கதிர் 338







## முதலமைச்சர் வேட்பாளர்களாகப் போட்டியிடுவதற்கு சஜித் அணியில் 4 எம்.பிக்கள் விரைவில் இராஜிநாமா?



கொழும்பு, ஒக்.13

மாகாண சபைகளுக்குரிய தேர்தல் நடத்தப்பட்டால் அதில் வெற்றி பெற முடியும் என்ற முழு நம்பிக்கை உள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

அவ்வாறு நம்பிக்கை இருப்பதால்தான் முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிடுவதற்கு நான்கு எம்.பிக்கள் முன்வந்துள்ளனர் எனவும் ஊடகங்களிடம் அவர் குறிப்பிட்டார்.

"நாட்டு மக்களும் தேர்தலை எதிர்பார்த்துள்ளனர். இதனால் விரைவில் தேர்தலை நடத்த வேண்டிய நிலை அரசுக்கு ஏற்படும்." - என்றும் அஜித் பி பெரேரா எம்.பி. மேலும் தெரிவித்தார்.

# மலையகத்தில் நேற்று விழா நடத்தி அப்பாவி மக்களை ஏமாற்றிய அரசு

## மனோ கணேசன் எம்.பி. கடும் சாடல்



கொழும்பு, ஒக். 13

இலங்கை வரலாற்றில் முதன் முறையாக இலங்கைக்குப் பாரதம் நன்கொடையாக வழங்கும் இந்திய வீடமைப்புத் திட்ட நிகழ்வு ஒன்றில், பயனாளிகள் என்று சிலரை அழைத்து வெறும் காகிதத்தில் உங்களுக்குக் காணியும், வீடும் தருகின்றோம் என எழுதிக் கொடுத்து அனுப்பியுள்ளார்கள் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

இன்று திங்கட்கிழமை நடத்தப்பட்ட விசேட ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"காணி" என்ற மணமகள், "வீடு" என்ற மணமகன் இல்லாத, காணி - வீட்டு உரிமை கல்யாணம் நடத்தி அப்பாவி மக்களை நேற்று ஏமாற்றியுள்ளார்கள். உண்மையில், நடந்தது, "காது குத்தல்" கல்யாணம் என நான் நினைக்கிறேன்.

நன்றாக ஜனாதிபதி அநுரவுக்கு இந்த விடயம் முழுமையாக தெரியும் என நான் நம்பவில்லை. அவரது பெயரை வைத்து வாழும்,

7➤

## மதுபோதையில் வாக்குவாதம்! ஒருவர் வெட்டிப் படுகொலை!!



கொழும்பு, ஒக். 13

ஆண் ஒருவர் வாளால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் குருநாகல் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குடாகல் கமுவ பகுதியில் நேற்று

7➤

## பழனி திகாம்பரம் எம்.பி. விரைவில் இராஜிநாமா?



நுவரெலியா, ஒக். 13

ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் பழனி திகாம்பரம், மாகாண சபைத் தேர்தலில் களமிறங்குவதற்குத் திட்டமிட்டுள்ளார் என நம்பகரமான வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

தேர்தல் அறிவிப்பு வெளியான பின்பு அவர் எம்.பி. பதவியை இராஜிநாமா செய்யவுள்ளார் எனவும் தெரியவருகின்றது.

7➤

# வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்துக்கு முன்பாக ஆசிரியர் சங்கத்தினர் போராட்டம்!






யாழ்ப்பாணம், ஒக். 13

இலங்கை ஆசிரியர் சங்கத்தினர் வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்துக்கு முன்பாக இன்று திங்கட்கிழமை கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தற்போது உள்ள ஆசிரியர் இடமாற்றத்தில் அரசியல் பாகுபாடு மற்றும் பழிவாங்கல் காணப்படுகின்றது எனவும், தற்போதுள்ள அரசின் கீழ் சில

7➤

World Health Organization

# கொழும்பில் இன்று ஆரம்பமாகும் உலக சுகாதார அமைப்பின் பிராந்திய மாநாடு

கொழும்பு, ஒக் .13

உலக சுகாதார அமைப்பின் தென் மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளைக் கொண்ட பிராந்தியத்தின் 78வது மாநாடு இன்று) முதல் 15ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெறவுள்ளது.

மூன்று நாட்கள் நடைபெறும் இந்த 78வது மாநாட்டை இலங்கை நடத்துகிறது.

உலக சுகாதார அமைப்பின்பணிப்பாளர் நாயகம் கலாநிதி டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயேசஸ், உலக சுகாதார அமைப்பின் தென்கிழக்கு ஆசிய பிராந்திய பொறுப்பதிகாரி கத்ரீனா போஹ்மே ஆகியோரும், 8 நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சுகாதார அமைச்சர்கள், இரண்டு நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தூதுவர்கள் மற்றும் உலக சுகாதார அமைப்பின் பிற வல்லுநர்கள் இந்த அமர்வில் பங்கேற்கவுள்ளனர்.

இதில் அவர்கள் எதிர்வரும் ஆண்டுகளுக்கான பிராந்திய சுகாதார நிகழ்ச்சி நிரலை உருவாக்குவார்கள்.

வலுவான முதன்மை சுகாதார சேவைகள் மூலம் ஆரோக்கியமான முதுமையை அடைவது மற்றும் புகையிலை இல்லாத சூழலுக்கு எதிரான போராட்டம் ஆகியவை 78வது பிராந்திய குழு அமர்வில் சுகாதாரத் தலைவர்கள் கலந்துரையாடும் பிரதான அம்சங்கள் ஆகும்.

தென் மற்றும் தென்கிழக்கு ஆசிய பிராந்திய சுகாதார அவசர நிதியத்தின் இருப்பு விரிவாக்கம் மற்றும் நுண்ணுயிர் எதிர்ப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்துதல் பற்றி உறுப்பு நாடுகளின் சுகாதார அமைச்சர்கள் மற்றும் சிரேஸ்ட அதிகாரிகள் இதில் விரிவாக கலந்துரையாடி, எதிர்கால முடிவுகளை எட்டுவார்கள்.

இந்த பிராந்திய மாநாட்டில் முக்கிய சுகாதாரப் பிரச்சினைகள் தொடர்பான தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கும், முந்தைய ஆண்டுகளின் தீர்மானங்களின் முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்வதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது.

அனைத்து மக்களின் சுகாதாரம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துதல், வழங்குதல் மற்றும் பாதுகாத்தல், மற்றும் சுகாதாரம்தொடர்பான நிலையான வளர்ச்சி இலக்குகளை மீண்டும் வழமைக்கு கொண்டுவருவதற்கு தேவையான நடவடிக்கைகளை புதுப்பித்தல் ஆகியவை இதன் நோக்கங்களாகும். (ஐ)

# வெளிநாட்டு பணவனுப்பல் செப்டம்பரில் அதிகரிப்பு



கொழும்பு, ஒக் .13

இந்த ஆண்டு செப்டம்பர் மாதத்தில் வெளிநாட்டு தொழிலாளர்கள் மூலம் 695.7 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அளவிலான வெளிநாட்டு பணப்பரிமாற்றங்கள் இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட சமீபத்திய அறிக்கையில் இது குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 2024 ஆம் ஆண்டில் இந்த காலப்பகுதியில் பெறப்பட்ட வெளிநாட்டு பணப்பரிமாற்றங்களின் அளவு 555.6 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இந்த ஆண்டு செப்டம்பர் மாதத்தை கடந்த ஆண்டு செப்டம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில் 140.1 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அதிகமாக வெளிநாட்டு பணப்பரிமாற்றங்கள் பெறப்பட்டுள்ளன.

இதற்கிடையில், இந்த ஆண்டு ஜனவரி 1ஆம் திகதி முதல் இதுவரை வெளிநாட்டு பணப்பரிமாற்றங்கள் மூலம் இலங்கைக்கு பெறப்பட்ட வருமானம் 5,811.7 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு அதே காலப்பகுதியில் பெறப்பட்ட வெளிநாட்டு பணப்பரிமாற்றங்களின் அளவு 4,843.8 மில்லியன் டொலர்களாக இருந்த நிலையில், இந்த ஆண்டு அதே காலப்பகுதியில் பெறப்பட்ட வெளிநாட்டு பணப்பரிமாற்றங்களின் அளவு 967.9 மில்லியன் டொலர்களாக வளர்ச்சியடைந்துள்ளது.

மேலும், செப்டம்பர் மாதத்தில் சுற்றுலா வருமானமாக 182.9 மில்லியன் டொலர்கள் ஈட்டப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆண்டின் தொடக்கம் முதல் செப்டம்பர் 30ஆம் திகதி வரை சுற்றுலா வருமானமாக 738.4 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஈட்டப்பட்டுள்ளதாகவும் மத்திய வங்கியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீட) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிறை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden -
Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# பாதாள குழுவை ஒழிப்பதில் ஒருபோதும் பின்வாங்க போவதில்லை தோட்ட தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு நிச்சயம்! - ஜனாதிபதி உறுதி

கொழும்பு, ஒக் .13

இலஞ்சம் மற்றும் ஊழல் ஆகியவற்றை நாட்டின் மேல் மட்டத்தில் இருந்து இல்லாது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இன்று பண்டாரவளையில் இடம்பெறும் மலையக சமூகத்திற்கு வீட்டு உரிமைகளை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு ஜனாதிபதி இதனைக் கூறியுள்ளார்.

அதேநேரம் போதைப்பொருள் மற்றும் பாதாள உலக குழுக்களை ஒழிக்கும் நடவடிக்கையில் இருந்து ஒரு போதும் பின்வாங்கப் போவதில்லை எனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை, 200 வருடகாலமாக வாழும் ஒரு சமூகத்தினர் குறைந்த பட்சம் சிறிய அளவிலான காணி கூட இல்லாமல் இருக்கின்றனர்.

எனவே அவர்களும் மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கு அரசாங்கம் என்ற வகையில் அவர்களது பிரச்சினைகளை தீர்ப்பதற்கு கடமைப்பட்டுள்ளோம்.

தோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்கள் தமக்கு நாளாந்த சம்பளமாக 1700 ரூபாவை வழங்குமாறு நீண்ட நாட்களாக கோரி வருகின்றனர்.

இந்த வருடத்தில் அந்த தொகையினை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

வறுமை, ஊட்டச் சத்து குறைபாடு, சுகாதார ரீதியான பாரிய பின்னடைவை மலையக மக்களே அதிகளவில் எதிர்நோக்கியுள்ளனர்.

எனவே அதில் கவனம் செலுத்தி சிறந்த சுகாதார சேவையினை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன் நாட்டில் சுத்தமான குடிநீரை வழங்க புதிய திட்டம் ஒன்றை முன்னெடுப்பதற்கு எதிர்வரும் வரவு செலவு திட்டத்தில் முக்கியத்துவம் வழங்கப்படும்.

வறுமைக்கும், கல்விக்கும் பாரிய தொடர்பு உள்ளது. எனவே மக்களை வறுமையில் இருந்து மீட்டு எடுப்பதற்கு சிறந்த கல்வி திட்டத்தை உறுதி செய்வோம்.

மலையக மக்களின் கௌரவம் அடிமட்டத்தில் உள்ளது என்பதை அறிவோம். எனவே அவர்களது கலாச்சாரத்திற்கு மதிப்பளித்து அவர்களது சமூகத்தை வளர்ச்சியடைவதற்கு அனைத்து பணிகளும் முன்னெடுக்கப்படும் என ஜனாதிபதி தெரிவித்தார். (ஐ)





## எதிர்கட்சித் தலைமைத்துவத்தில் தலையிடும் நாமல்!

கொழும்பு, ஒக் .13

எதிர்கட்சித் தலைவராக சஜித் பிரேமதாச இருந்தாலும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவே எதிர்கட்சித் தலைமைத்துவத்தில் அதிகம் தலையிடுவதாக விவசாய அமைச்சர் லால்காந்த தெரிவித்துள்ளார்.

கண்டி மாவட்ட செயலகம் ஏற்பாடு செய்திருந்த விழா ஒன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கொண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த நாட்டின் அரசியல் கலாச்சாரத்தின்படி, எதிர்கட்சி ஆட்சியை ஆதரிப்பதில்லை. அரசாங்கம் தோல்வியடைந்துவிட்டதாக ஒரு கருத்தை உருவாக்கி ஆட்சியை கைப்பற்ற அவர்கள் விரும்புகின்றார்கள்.

இந்த நாட்டில் சரியான எதிர்க்கட்சி இல்லை என்பது எங்கள் வருத்தம். முடிந்தால் அரசாங்கத்திற்கு எதிராக எதிர்க்கட்சிகள் ஒன்று சேர வேண்டும் என நான் சவால் விடுகின்றேன்.

சஜித் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தாலும், சமூகம் அவரை எதிர்க்கட்சித் தலைவராக ஏற்றுக்கொள்ளவில்லை. நாமல் ராஜபக்சவின் கடந்த கால செயற்பாடுகள் காரணமாக அவராலும் எதிர்கட்சித் தலைமையை பெற முடியவில்லை எனத் தெரிவித்துள்ளார். (ஐ)

## மட்டக்களப்பில் திடீரென தீப்பற்றி எரிந்த உணவகம்



மட்டக்களப்பு, ஒக் .13

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு முன் அமைந்துள்ள உணவகம் ஒன்று திடீரென தீப்பற்றியதையடுத்து உணவகத்தில் நித்திரையில் இருந்த 7 பணியாளர்கள் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர்.

இச் சம்பவம் நேற்று இரவு 11.00 மணிக்கு இடம் பெற்றதை அடுத்து அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது.

குறித்த உணவகத்தை வழமைபோல இரவு 9.00 மணிக்கு மூடியதுடன் அங்கு வேலை செய்துவரும் 7 இளைஞர்களும் உணவகத்தில் நித்திரைக்கு சென்றுள்ளனர்.

இந்த நிலையில் உணவகத்தில் மின் ஒழுக்கு காரணமாக தீப்பற்றி எரிவதை அங்கு நித்திரைக்குச் சென்ற ஒருவர் கண்ட நிலையில் அங்கு நித்திரையில் இருந்த 6 பேரையும் எழுப்பியதுடன் கடையின் கதவை உடைத்து கொண்டு வெளியேறியுள்ளனர்.

அவர்கள் அங்கிருந்து வெளியேறி 5 நிமிடத்தில் கடைத்தொகுதியில் பாரிய தீ விபத்து ஏற்பட்டதை அடுத்து அருகில் இருந்த வீடுகளில் இருந்தவர்கள் பெரும் பதற்றம் அடைந்தனர்.

இதனையடுத்து மாநகரசபையின் தீயணைப்பு படை மற்றும் பொலிசாரின் தீயணைப்பு பிரிவினர், காத்தான்குடி நகரசபை தீயணைப்புபடை இணைந்து நள்ளிரவு 12.30 மணிக்கு போராட்டத்தின் மத்தியில் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த போதும் உணவகமும் அதனோடு இணைந்திருந்த கடையும் முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளது

இந்த தீ விபத்து மின் ஒழுக்கு காரணமாக ஏற்பட்டுள்ளதாக பொலிசாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

அதேவேளை சம்பவ இடத்துக்கு மாநகரசபை முதல்வர் சிவம் பாக்கியநாதன், பிரதி முதல்வர் வைரமுத்து தினேஷ்குமார், மாநகர சபை உறுப்பினர்களான மதன்,பிரதி, ஜனகன், தரண் ஆகியோர் வருகை தந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர ஈடுபட்டனர்.

இது தொடர்பான விசாரணைகளை மட்டு தலைமையக பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## இலஞ்ச ஊழல் ஆணைக்குழு சட்டத்தின் பிரகாரம் செயற்படுவதால் கலக்கத்தில் ஊழல்வாதிகள்!



கொழும்பு, ஒக் .13

கையூட்டல் அல்லது ஊழல் பற்றிய ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம், சட்டத்தின் அடிப்படையில் கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதால் ஊழல்வாதிகள் கலக்கமடைந்துள்ளதாகப் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.

அரச நிதியை மோசடி செய்தவர்கள் நிச்சயமாக சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ராஜபக்ஷர்கள் உட்பட கடந்த கால ஊழல்வாதிகளின் ஊழல் மோசடிகள் வெளிவரும் போது பல ஊழல்வாதிகள் அச்சமடைந்துள்ளனர்.

அரச நிதியை மோசடி செய்தவர்களுக்கு எதிராக கையூட்டல் ஆணைக்குழு கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

இதன் காரணமாகவே, ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் மீது, பலரும் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, ரக்பி வீரர் தாஜுதீனின் படுகொலை தொடர்பில் புதிய விடயங்கள் வெளியாகும் போது நாமல் ராஜபக்ஷ அச்சமடைந்து பொலிஸ் திணைக்களத்தின் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்.

பொலிஸ்மா அதிபருக்கு அதிகாரங்களை வழங்குவது தொடர்பில் எதிர்க்கட்சியினர் மக்கள் மத்தியில் தவறான நிலைப்பாட்டை ஏற்படுத்துவதாகவும் பிரதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## கைதிகளுக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்படுகிறதா?

சந்தேகநபர்களை அல்லது கைதிகளை விசேட சிறையில் தடுத்துவைக்குமாறு நீதிவான்கள் உத்தரவிடுவதைத் தவிர்க்குமாறு நீதிச்சேவை ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் பிரசன்ன அல்விஸ் 'ின் கையெழுத்துடன் நீதித்துறை அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

நீதிபதிகளின் உத்தரவின் பேரில் சந்தேகநபர்கள் அல்லது கைதிகள் பிரத்தியேக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கு அமைய இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. அத்துடன், எந்தவொரு சந்தேகநபர் அல்லது கைதிக்கு விசேட பாதுகாப்பு வழங்க நீதிபதிகள் உத்தரவிடக்கூடாது எனவும் நீதிச்சேவை ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி, திறந்த நீதிமன்றத்தில் பெறப்படும் கோரிக்கைகள் மாத்திரம் சம்பந்தப்பட்ட சிறைச்சாலை கண்காணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால் போதுமானது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சந்தேக நபர்கள் அல்லது கைதிகளை அவர்களின் குடும்பத்தினரின் சிறப்பு சந்தர்ப்பங்களுக்காக அல்லது பிற நோக்கங்களுக்காக சிறையில் அடைக்கும் காலத்தில் அவர்களின் வீடுகளுக்கும் பிற இடங்களுக்கும் அழைத்துச்செல்ல நீதிபதிகள் உத்தரவிடக்கூடாது.

எந்தவொரு காரணத்திற்காகவும் சிறையிலிருந்து எவரேனும் வெளியே அழைத்துச் செல்லப்பட்டால், சிறைச்சாலை கண்காணிப்பாளர் அந்த விடயத்தையும் அதற்கான காரணங்க ளையும் நீதிபதியிடம் தெரிவிக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.ஐ)

# நாட்டின் பன்முகத்தன்மையை பிரதிபலிக்கும் கல்விமுறையும் இந்தியாவுக்கு தேவை



சுதந்திரத்தின் அடிப்படை கல்வி. இது சிலருக்கு சலுகையாக மாறிவிடக்கூடாது. எனவே நாட்டின் பன்முகத்தன்மையை பிரதிபலிக்கும் கல்விமுறையும் இந்தியாவுக்கு தேவை என மக்களவை எதிரிகட்சித் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

'இந்தியாவில், உயர் சாதியினருக்கு மட்டுமே முன்னுரிமை அளிக்கப்படுகிறது. ஆனால் அதிக எண்ணிக்கையில் உள்ள தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு எந்த பிரதிநிதித்துவமும் கிடைக்கவில்லை. கல்வி முறையில் பழங்குடியினர், நடுத்தர மற்றும் கீழ் சாதியினரின் வரலாறு மற்றும் மரபுகளைச் சேர்க்க விரும்புகிறேன்,' என்று ஒடிசாவில் சிலி பல்கலைக்கழகத்தில் மாணவர்களுடன் நாட்டின் கல்வி முறை குறித்து உரையாடலின் போது மக்களவை எதிரிகட்சித் தலைவர் ராகுல் காந்தி கூறினார்.

மேலும் 'கடந்த பத்தாண்டுகளில், நாட்டில் அறிவியல் உணர்வு, தர்க்கம் மற்றும் சுதந்திர சிந்தனை குறைந்து வருகிறது. இது பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. கல்வி ஆர்வம், சுதந்திர சிந்தனை மற்றும் சமூக மற்றும் அரசியல் பிரச்சினைகள் குறித்து வெளிப்படையாக கேள்விகளைக் கேட்கும் பழக்கத்துடன் தொடங்குகிறது.

இது சுதந்திரத்தின் அடித்தளம் மற்றும் ஒரு சிலரின் சொத்தாக இருக்கக்கூடாது. விஞ்ஞான உணர்வை வளர்க்கும், விமர்சன சிந்தனையை ஊக்குவிக்கும் மற்றும் நாட்டின் வளமான பன்முகத்தன்மையை பிரதிபலிக்கும் கல்வி முறை இந்தியாவிற்குத் தேவை' எனவும் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார். (ஐ)

## சாதிய அடையாள பெயர்களை மாற்றுவதில் அவசரம் வேண்டாம்



சமூக, சாதிய அடையாள பெயர்களை மாற்றுவதில் அவசரம் வேண்டாம் என பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியதாவது தமிழ்நாட்டில் பல காலமாக நடைமுறையில் உள்ள ஊர்கள், சாலைகள், தெருக்கள், நீர்நிலைகள் பெயர்களில் உள்ள சாதி அடையாள பெயர்களை நீக்குவதாக அரசு வெளியிட்டுள்ள அரசாணை தமிழகத்தில் உள்ள பல சமூக மக்கள் இடத்தில் சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது.

பல ஆண்டுகளுக்கு முன்பு இருந்த முன்னோர்கள் பலர் தமது பகுதி மக்களின் கல்வி வளர்ச்சிக்கு பல ஏக்கர் நிலங்களை கல்விக் கூடங்களுக்கு தானமாக கொடுத்தும், மக்களின் பொது செயல்பாடுகளுக்காகவும் பல கொடைகளை வழங்கி பல பகுதிகளை வளர்ச்சி அடைய செய்துள்ளனர். அவர்கள் நினைவாகவும், அவர்களை போற்றி நினைவு கூறும் வகையில் அவர்களின் பெயர் உடன் அவர்கள் பயன்படுத்தி வந்த அவர்கள் குல பெயர் உடன் முழுமையாக பெயரை கொண்டு அவர்கள் பெயர் அந்த பகுதி மக்களின் விருப்பத்திற்கு ஏற்ப சூட்டப்பட்டது. அதுபோல் விடுதலைப் போராட்ட வீரர்கள், மொழி, மண், மக்களுக்காக போராடிய தியாகிகளுக்கு நன்றி செலுத்தும் விதமாக அவர்களின் பெயர்கள் உடன் அவர்கள் பயன்படுத்தி வந்த அவர்கள் சமுதாய மற்றும் குல பெயர் உடன் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

ஒரு தெருவில், ஒரு ஊரில் குழுவாக நல் உறவு உடன் வசிக்கின்ற மக்கள் அடையாளமாகவும் அந்த பகுதிக்கு அவர்கள் சமூக பெயர்கள் வைக்கப்பட்டுள்ளது. ஆனால் தற்போது சாதிய பெயர்களை நீக்குவதாக கூறி அரசு ஒட்டுமொத்தமாக பல சமூகங்களின் அடையாளத்தையே நீக்குவது சமூக ஒற்றுமைக்கும், பல ஆண்டு கால கலாச்சார நடைமுறைக்கும் எதிராக உள்ளது. நமது முன்னோர்கள் செய்த தியாகங்களையும் சீர்குலைத்து அவர்கள் நினைவுகளை மறைக்க வழி செய்வது போல் உள்ளது.

இவ்வாறு பெயர் நீக்குவதிலும் புதிய பெயர் சூட்டுவதிலும் ஆங்காங்கே முரண்பாடுகள் அந்த பகுதி மக்கள் மத்தியில் எழுந்துள்ளன. அதேசமயம் ஒரு சமுதாயத்தின் பெயர் நீக்கப்படும் இடத்தில் அதே சமுதாயத்தைச் சார்ந்த தலைவர்கள் பெயர்தான் சூட்டப்பட வேண்டும். அப்போது தான் அந்தப் பகுதி மக்களிடத்தில் அதை ஏற்றுக் கொள்ளும் மனப்பான்மை வரும். இது அனைத்து சமுதாயப் பெயர்களுக்கும் பொருந்தும். அந்தந்த பகுதி மக்களுக்காக தங்களை அர்ப்பணித்தவர்கள் முழு பெயர்களை அந்தந்த பகுதியில் தான் சூட்ட வேண்டும். அப்போதுதான் அவர்கள் நினைவுகளை அந்த பகுதி மக்கள் நினைவு கூறுவார்கள். அதை தவிர்த்து தன்னிச்சையாக பெயர் சூட்டுவது ஏற்புடையது அல்ல.

சமூக அடையாளத்துடனான ஊர்கள், தெருக்களின் பெயர்கள் ஆயிரக்கணக்கில் இருக்கிறது. காலங்காலமாக இருக்கின்ற இந்த பெயர்களை எல்லாம் நீக்குவது தமிழக மக்கள் இடத்தில் குழப்பத்தையும், முரண்பாடுகளையுமே ஏற்படுத்தும். எனவே அரசு இந்த விவகாரத்தில் நிதானமாக பொறுமையை கையாண்டு, அந்தந்த பகுதி மக்களின் கருத்தறிந்து முறையாக செயல்பட வேண்டும். இவ்வாறு அவர் வலியுறுத்தியுள்ளார். (ஐ)



## கரூர் வழக்கை சிபிஐ விசாரணைக்கு மாற்ற உச்சநீதிமன்றம் உத்தரவு

கரூரில் கடந்த செப்டம்பர் 27ம் தேதி விஜய் கலந்து கொண்ட பிரசாரத்தின் போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். 100க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். நெஞ்சை உலுக்கும் இந்த சம்பத்தை அரசியலாக்குவதிலும், மற்றவர்கள் மீது பழியை போட்டு தப்பிப்பதிலும் தவெகவினர் குறியாக இருக்கின்றனர். இந்த விவகாரம் தொடர்பாக சிபிஐ விசாரணை கோரிய மனுவை உயர் நீதிமன்ற மதுரை கிளை தள்ளுபடி செய்தது. அதேபோல், தவெக தலைவர் விஜய்க்கு கடும் கண்டனங்களை தெரிவித்த சென்னை உயர் நீதிமன்றம், சிறப்பு புலனாய்வு விசாரணை குழு அமைத்தது. இதை ரத்து செய்யக்கோரி தவெக சார்பில் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது.

இதேபோல் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்த சிறுவன் பிருத்திக்கின் தந்தை பன்னீர்செல்வம், பாத்திமாபானுவின் கணவர் பிரபாகரன், சந்திராவின் கணவர் செல்வராஜ் ஆகியோரும் சம்பவம் குறித்து சிபிஐ விசாரிக்க கோரி உச்சநீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்தனர். கரூர் கூட்ட நெரிசல் சம்பவத்தை சிபிஐ விசாரிக்கக்கோரியும் பாஜக மனு தாக்கல் செய்திருந்தது. இந்த மனுக்கள் அனைத்தும் உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஜே.கே. மகேஸ்வரி, அஞ்சாரியா ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரிக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில், கரூர் கூட்ட நெரிசலை சிபிஐ விசாரிக்க உத்தரவிடக்கோரி தாக்கல் செய்த மனுக்கள் உச்சநீதிமன்றத்தில் இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது, கரூர் கூட்ட நெரிசல் சம்பவத்தை சிபிஐ விசாரிக்க உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மேலும், விசாரணையை கண்காணிக்க ஓய்வு பெற்ற நீதிபதி அஜய் ரஸ்தோகி தலைமையில் விசாரணை குழுவில் 2 ஐபிஎஸ் அதிகாரிகள் இடம்பெறுவார்கள். எனினும் அவர்கள் தமிழ்நாட்டை பூர்வீகமாக கொண்டவர்களாக இருக்கக் கூடாது என உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்த வழக்கில் சிபிஐ நடத்தும் விசாரணையை மாதம்தோறு இந்த குழுவிடம் அறிக்கை தாக்கல் செய்யவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இதையடுத்து சிபிஐ கோரிய மனுத் தாக்கலில் மிகப்பெரிய மோசடியை உச்ச நீதிமன்ற கருத்தில் கொள்ள வேண்டும் என தமிழ்நாடு அரசு சார்பில் முறையிடப்பட்டது. இது தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் மோசடியாக மனுத் தாக்கல் செய்யப்பட்டது, உண்மையாக இருக்கும் பட்சத்தில் அதனை கருத்தில் கொள்வோம் என நீதிபதி அமர்வு தெரிவித்தது. மேலும், மனுத்தாக்கலில் மோசடி நடந்திருந்தால் அதையும் சிபிஐ விசாரிக்க உத்தரவிடுவோம் என நீதிபதிகள் தெரிவித்துள்ளனர். (ஐ)

## புதிய தமிழகம் கட்சி ஜன.7ல் மதுரையில் மாநாடு



புதிய தமிழகம் கட்சி தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில், "புதிய தமிழகம் கட்சியின் ஏழாவது மாநில மாநாடு 2026, ஜனவரி 7ம் தேதி மதுரையில் நடக்கிறது. இதற்காக, நெல்லை மாவட்டத்தில் அக். 14ம் தேதி (நாளை) பாளை ஒன்றிய பகுதிகளிலும், அக். 15ல் பாப்பாக்குடி ஒன்றிய பகுதிகளிலும், அக்டோபர் 16ல் சுத்தமல்லி முதல் தென்பத்து வரையிலும், அக். 17ல் பாளை மற்றும் மேலப்பாளையம் மண்டல பகுதிகளிலும், அக். 18ல் நெல்லை மண்டல பகுதிகளிலும் டாக்டர் கிருஷ்ணசாமி சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)



# வேண்டியதை கொடுத்தால் என்ன?

ஒரு காட்டில் நரியும் கொக்கும் மிக நெருங்கிய நண்பர்களாக இருந்தன. ஒருநாள், நரி கொக்கை விருந்துண்ண தனது வீட்டுக்கு அழைத்தது. நரிக்குத் தட்டையான பாத்திரத்தில் உணவு உண்ணுவது எளிது. எனவே கொக்குக்கும் தட்டையான பாத்திரத்தில் உணவைப் பரிமாறியது. கொக்கின் தேவையைப் பற்றி சிந்திக்கவில்லை. கொக்குக்கு உண்பதற்கு மிகவும் சிரமமாக இருந்தது.

அடுத்த முறை, கொக்கு நரியை விருந்துண்ண வீட்டுக்கு அழைத்தது. கொக்குக்கோ கழுத்து நீளமாக இருப்பதால், ஜாடியில் உணவருந்துவது எளிது. இப்போது கொக்கு நரியின் தேவையைப் பற்றி சிந்திக்காமல், உணவை ஜாடியிலேயே பரிமாறியது. இந்த முறை நரிக்கு மிகவும் சிரமமாக இருந்தது.

நாமும் இதே போன்று தனக்கு வேண்டியதைப் பெற இயலாத ஒரு சுழற்சியைத்தான், நம் உறவுகளில் உருவாக்கிக் கொண்டே இருக்கிறோம்.

(அவள், அவன் என்ற பதங்களே, பாலினத்தை வேறுபடுத்திக் காட்ட உதவுவதால் அவர் என்று குறிப்பிட முடியவில்லை.)

அவள்: எனக்கு மிகவும் தண்ணீர் தாகமாக உள்ளது் தண்ணீர் வேண்டும்.

அவன்: இந்தா ஜுஸ் குடி. இந்த ஏரியாவில், இந்த ஜுஸ் மிகவும் பிரசித்திப் பெற்றது. அதனால்தான் ஜுஸை வாங்கி வந்தேன்.

அவள்: எனக்கு கோப்பி போட்டுக் கொடுக்கிறாயா?

அவன்: நான் நன்றாக மசாலா டீ போடுவேன். முதல் முதலில் எங்கள் வீட்டுக்கு வந்திருக்கிறீர்கள். நான் மசாலா டீ போட்டுத் தருகிறேன்.

அவள்: தெருமுனைக்குச் சென்று, எனக்குக் கொஞ்சம் பூ வாங்கி வருகிறீர்களா?

அவன்: நாளை கடையில் போய் உனக்கு மைசூர் சில்க்கே வாங்கித் தருகிறேன்.

அவள்: எனக்கு தாஜ்மஹால் பார்க்க வேண்டும் எனச் சிறு வயதிலிருந்தே ஆசை. போகலாமா?

அவன்: தாஜ் மஹால் என்ன பெரிய தாஜ் மஹால்? நான் உன்னை வெளிநாடு கூட்டிக்கொண்டு போறேன்.

அவள்: என்னோடு சிறிது நேரம் உட்காருகிறீர்களா? மிகவும் தனிமையில் உள்ளது போல் உள்ளது.

அவன்: சரி வா, நாம் ஏதாவது சினிமாவுக்குப் போகலாம்.

இந்த மாதிரியான உரையாடல்களைக் கேட்கும்போது, இதுதான் எனக்குத் தோன்றும், “இவர்களுக்கு என்ன பிரச்சினை? அடுத்தவருக்கு , அவர் வேண்டியதைக் கொடுத்தால் என்ன?”

கவனித்துப் பார்த்தால், இவர்கள் எல்லாம் ஒருவரை இன்னொருவர் அன்பு செய்பவர்கள், இவை அவர்களுக்குள் நடக்கும் உரையாடல்கள்தாம்.

ஆனால், அந்த அன்பை வெளிப்படுத்துவதில் முக்கியமாக இருப்பது, அவர்கள் கேட்பதைக் கொடுப்பதுதானே? அதுதான் எளிதானதும்கூட.

ஒருவர், தண்ணீரைக் கேட்டால் தண்ணீரைக் கொடுக்க வேண்டியதுதானே?. அதற்குப் பின், வேண்டுமானால் உங்களுக்குப் பிடித்ததையும் கொடுக்கலாம். ஆனால், அவர்கள் கேட்பதைக் கொடுக்காமல் போவது, அலட்சியம் செய்வதுபோல்தானே?

நிறைய நேரங்களில் நாம் அடுத்தவரை எவ்வளவு நேசிக்கிறோம் என்பதை வெளிப்படுத்த ஆசைப்படுவோம். ஆனால், அது முடிவில் மிதமிஞ்சிய செயலாக்கம் ஆகிவிடும் **(over performance)**. அடுத்தவரின் தேவைகளையும் ஆசைகளையும் காதில் வாங்காதது போல் ஆகிவிடும்.

உண்மையில் அன்பை வெளிப்படுத்த, மகிழ்ச்சியைக் கொடுக்க, அவர்கள் வேண்டியதைக் கொடுத்தாலே போதும். அடுத்தவரின் உணர்வுகளை மதித்து, தேவைகளைப் புரிந்து கொண்டாலே போதும். எளிமையான விஷயங்களை நாம்தான் சிக்கலாக்கிக்கொள்கிறோம்.

சில நேரங்களில், அடுத்தவரின் மகிழ்ச்சிக்குரிய விஷயங்களை, நாமே கற்பனை செய்துகொள்வோம். மற்றவரின் வார்த்தைகளைக் காது கொடுத்து கேட்பதில் என்ன பிரச்சினை?

தெருமுனைக்குச் சென்று பூ வாங்குவது எளிதாக இருக்கும் போது, அதைச் செய்யாமல், இன்னொன்று செய்வதாக வாக்குறுதி அளித்துவிட்டு, அதைச் செய்யாமல் போனால், உங்கள் மீதான நம்பிக்கையைக் குறைத்துவிடும்தானே?

பொதுவாக, நம்மால் தர முடியாததை, நம்மை அன்பு செய்பவர்கள், நம்மைப் புரிந்தவர்கள், ஒரு போதும் கேட்பதில்லை என்பதே உண்மை.

ஆனால், நாம் இவ்வாறு நம் விருப்பத்திற்கேற்ப மற்றவர்களுக்குச் செய்துவிட்டு நமக்கு வேண்டியதை அவர்களிடம் இருந்து எதிர்பார்த்தால் எப்படிக் கிடைக்கும்?மீண்டும் மீண்டும் நரியும் கொக்கும் விருந்து வைத்த கதைதான்.

ஏனென்றால் ஒருவருடன் உறவில் இருப்பது என்பது ஒரு விருப்பம்தான். நீண்ட நாள் நட்புறவில் அல்லது காதல் உறவில் அல்லது திருமண உறவில் இருக்கிறீர்கள் என்றால், ஒவ்வொரு முறையும், அவர்களுடனான உறவையே தேர்ந்தடுத்துக்கொண்டிருக்கிறீர்கள் என அர்த்தம். அடுத்தவருக்கு வேண்டியதை நாம் கொடுக்கும் போதுதான், நாம் ஒவ்வொரு முறையும் நம் விருப்பம் அழகாக வெளிப்பட்டுக்கொண்டே இருக்கும். அன்பும் புரிதலும் அதிகமாகிக்கொண்டே செல்லும்.

கொஞ்சம் காது கொடுத்துக் கேட்டு, இந்த ஒரு சிறிய மாற்றத்தைச் செய்தால், நிறைய மாற்றங்களைப் பார்க்கலாம்.

தண்ணீரைக் கேட்டால், தண்ணீரைக் கொடுங்கள். **Over performance** ஐ ஒதுக்கி வையுங்கள்.

எனவே, எப்போதும் உறவில் அடுத்தவர் விருப்பத்தைக் காது கொடுத்துக் கேட்டு, ஓவர் பெர்ஃபார்மன்ஸை ஒதுக்கி வைத்து, வேண்டியதைக் கொடுப்பதன் மூலம், நமக்குத் தேவையானதைப் பெற்று வாழ்வைக் கொண்டாடலாம்.



# அமெரிக்காவில் பாரில் நடந்த துப்பாக்கி சூட்டில் 4 பேர் பரிதாபமாக உயிரிழப்பு: 20 பேர் காயம்!



தெற்கு கரோலினா: அமெரிக்காவில் பாரில் நடந்த துப்பாக்கி சூட்டில் 4 பேர் உயிரிழந்தனர். மேலும் 20 பேர் காயமடைந்துள்ளனர். அமெரிக்காவில் சமீபகாலமாக அடிக்கடி துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் அரங்கேறி வருகிறது. கால்பந்து மைதானம் மற்றும் பள்ளி என இருவேறு வேறு இடங்களில் நேற்று முன்தினம் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 6 பேர் உயிரிழந்தனர். இந்நிலையில், அமெரிக்காவின் தெற்கு கரோலினாவில் செயின்ட் ஹெலினா தீவு பகுதியில் உணவு விடுதியுடன் கூடிய பார் ஒன்று உள்ளது. இதில், மதுபானங்களுடன் உணவு வகைகளும் விற்பனை செய்யப்படும்.

இந்த நெரிசலானா பாரில் நுழைந்த மர்மநபர் ஒருவர் திடீரென துப்பாக்கிச்சூட்டில் ஈடுபட்டார். இதில் பலர் பலத்த காயமடைந்தனர். துப்பாக்கி குண்டு வெடிக்கும் சத்தம் கேட்டதும் பாரில் இருந்தவர்கள் அலறியடித்து தப்பியோடினார்கள். சம்பவம் நடந்தபோது, நூற்றுக்கணக்கானோர் அந்த பாரில் இருந்துள்ளனர். அவர்களில் பலர் அடைக்கலம் தேடி, அருகேயுள்ள கடைகளுக்குள்ளும், கட்டிடங்களுக்கு உள்ளேயும் புகுந்தனர். இந்த துப்பாக்கி சூட்டில் 4 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், 20 பேர் பலத்த காயங்களுடன் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர். இதில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதனால் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என கூறப்படுகிறது. (ஐ)

## ஆப்கன் படை அதிரடி தாக்குதல் 58 பாகிஸ்தான் ராணுவ வீரர்கள் பலி: எல்லையில் கடும் பதற்றம்



இஸ்லாமாபாத்: பாகிஸ்தான்-ஆப்கானிஸ்தான் இடையே நடந்த மோதலில் 58 பாகிஸ்தான் வீரர்கள் பலியானார்கள். 30 பேர் படுகாயமடைந்தனர். இந்த மோதலால் இரு நாடுகள் இடையே கடும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. எல்லை தாண்டிய தீவிரவாதம் தொடர்பாக ஆப்கானிஸ்தானுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே பதற்றமான சூழல் நிலவி வருகிறது. கடந்த சில வாரங்களில் தெஹ்ரீக் இ தலிபான்(டிடிபி) நடத்திய தொடர்ச்சியான தாக்குதல்களில் பாகிஸ்தான் வீரர்கள் ஏராளமானோர் பலியாகி உள்ளனர். கடந்த வாரம் கைபர் பக்துன்க்வா மாவட்டத்தில் டிடிபி தாக்குதலில் 2 அதிகாரிகள் உட்பட 11 ராணுவ வீரர்கள் பலியானார்கள். இதையடுத்து சில நாட்களுக்கு முன்பு காபூலில் பாகிஸ்தான் வான்வழி தாக்குதல் நடத்தியது. இந்த நிலையில், நேற்றுமுன்தினம் பாகிஸ்தான் மீது ஆப்கானிஸ்தான் ராணுவம் தாக்குதல் நடத்தியது. எல்லையில் நடந்த பலத்த துப்பாக்கி சண்டையில் பாகிஸ்தான் வீரர்கள் 58 பேர் பலியாகினர். 30 பேர் காயமடைந்தனர்.

இதுகுறித்து ஆப்கானிஸ்தான் தலிபான் அரசின் தலைமை செய்தி தொடர்பாளர் சபியுல்லா முஜாஹித்,“ பலுச்சிஸ்தானில் உள்ள அங்கூர் அட்டா, பஜாவூர், குர்ரம்,சித்ரல் ஆகிய இடங்களில் பாகிஸ்தான் நிலைகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 58 வீரர்கள் பலியாகினர். 30 பேர் காயமடைந்தனர். 20க்கும் மேற்பட்ட நிலைகள் அழிக்கப்பட்டன. மேலும்,ஏராளமான ஆயுதங்கள்,ராணுவ உபகரணங்கள் கைப்பற்றப்பட்டன. தாக்குதலில் 9 ஆப்கன் வீரர்களும் கொல்லப்பட்டனர். கத்தார், சவுதியின் வேண்டுகோளையடுத்து தாக்குதல் நிறுத்தப்பட்டது” என்றார்.

ஆப்கன் பாதுகாப்பு அமைச்சகம் கூறுகையில், பாகிஸ்தான் மீண்டும் ஆப்கானிஸ்தானின் பிராந்திய ஒருமைப்பாட்டை மீறினால், எங்கள் ஆயுதப் படைகள் நாட்டின் எல்லைகளைப் பாதுகாக்க முழுமையாகத் தயாராக உள்ளன, மேலும் வலுவான பதிலடியை வழங்கும் என்று தெரிவித்துள்ளது. பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் மொஹ்சின் நக்வி,“ எல்லையில் உள்ள நிலைகள் மீது ஆப்கான் படைகள் எந்த வித காரணமுமின்றி தாக்குதலை நடத்தியுள்ளன.

பொதுமக்கள் மீது ஆப்கானிஸ்தான் படைகள் நடத்திய துப்பாக்கிச் சூடு சர்வதேச சட்டங்களை அப்பட்டமாக மீறுவதாகும். பாகிஸ்தான் படைகள் உடனடியாக உரிய பதிலை அளித்துள்ளன. எந்தவித ஆத்திரமூட்டலையும் பொறுத்துக்கொள்ள முடியாது” என்றார்.

### ஆப்கன் அமைச்சர் முட்டாகி எச்சரிக்கை

இதற்கிடையே இந்தியாவில் சுற்றுபயணம் மேற்கொண்டு வரும் ஆப்கன் வெளியுறவு அமைச்சர் அமீர்கான் முட்டாகி, நேற்று டெல்லியில் பேட்டியளித்தார். அப்போது பாகிஸ்தான் இந்த தாக்குதலை நடத்துவதற்கு, இந்தியாவுடன் ஆப்கானிஸ்தான் நெருக்கமாகி வருவதுதான் காரணமா என்று கேட்ட போது,“ இந்த கேள்வியை பாகிஸ்தானிடம் கேளுங்கள். எங்களுக்கு பாகிஸ்தானுடன் எந்த வித பிரச்னையும் இல்லை.

பாகிஸ்தான் பேச்சுவார்த்தைக்கு வராவிட்டால் எங்களுக்கு வேறு வழி எதுவும் இல்லை. கத்தார், சவுதி ஆகிய நாடுகள் மோதலை நிறுத்தும்படி கேட்டு கொண்டன. அதை நாங்கள் ஏற்று கொண்டோம். பேச்சுவார்த்தைக்கான கதவுகள் திறந்து உள்ளன. ஆப்கானிஸ்தானில் அமைதியை ஏற்படுத்தி உள்ளோம்.

இந்த பிராந்தியம் முழுவதும் அமைதியை கொண்டு வர முயற்சிக்கின்றோம். யாருக்காவது அமைதி தேவை இல்லையென்றால், எல்லையை நாங்கள் பாதுகாக்கும் நிலைக்கு தள்ளப்படுவோம்” என்றார். இதற்கிடையே கடந்த 10ம் தேதி டெல்லியில் முட்டாகி பேட்டியளித்தபோது பெண் பத்திரிகையாளர்கள் அனுமதிக்கப்படாதது சர்ச்சையான நிலையில் நேற்றைய பத்திரிகையாளர் சந்திப்பில் பெண்கள் அனுமதிக்கப்பட்டனர்.

### 200 தலிபான்கள் பலி?

பாகிஸ்தான் ராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஆப்கானிஸ்தானுடன் நடந்த எல்லை மோதலில் 23 பாகிஸ்தான் வீரர்கள், 200க்கும் மேலான தலிபான்கள் மற்றும் அதன் தொடர்புடைய போராளிகள் கொல்லப்பட்டனர் என்று தெரிவித்துள்ளது.

### பாக். குற்றச்சாட்டு

ஆப்கானிஸ்தானின் மண்ணில் தீவிரவாத குழுக்கள் செயல்படுவதற்கு தலிபான்கள் தொடர்ந்து ஆதரவு அளித்து வருவதாக பாகிஸ்தான் குற்றம் சாட்டியுள்ளது. பாகிஸ்தான் ராணுவ ஊடக பிரிவு வெளியிட்டுள்ள செய்தியில், பிராந்தியத்தின் அமைதி மற்றும் பாதுகாப்பை கருதி ஆப்கனில் செயல்பட்டு வரும் ஆயுத குழுக்கள் மீது உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால், தீவிரவாத இலக்குகளை தொடர்ந்து செயலிழக்கச் செய்வதன் மூலம் தனது மக்களைப் பாதுகாக்கும் உரிமையை பாகிஸ்தான் தொடர்ந்து பயன்படுத்தும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)



## பதவி விலகிய ஒரே வாரத்துக்குள் பிரான்ஸ் புதிய பிரதமராக செபாஸ்டின் மீண்டும் நியமனம்

பிரான்ஸ் நாட்டின் பாதுகாப்புத்துறை முன்னாள் அமைச்சர் செபாஸ்டின் லெகோர்னு 47வது பிரதமராக கடந்த மாதம் தேர்ந்தெடுக்கப்பட்டார். கடந்த 5ஆம் தேதி பிரான்ஸ் அமைச்சரவை விரிவாக்கம் செய்யப்பட்டது. அப்போது ஏற்கனவே அமைச்சரவையில் இருந்தவர்களுக்கு மீண்டும் வாய்ப்பு அளிக்கப்பட்டது. அதன்படி முன்னாள் நிதியமைச்சர் புருனே லு பாதுகாப்புத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டார். இது கடும் விமர்சனத்துக்குள்ளானது.

இந்த நிலையில் கடந்த திங்கள்கிழமை(6ஆம் தேதி) பிரதமர் பதவியை ராஜினாமா செய்வதாக செபாஸ்டின் அறிவித்தார். இந்நிலையில் பிரான்ஸ் அரசியலில் புதிய திருப்பமாக செபாஸ்டின் லெகோர்னு மீண்டும் பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார். நடப்பாண்டு இறுதிக்குள் புதிய அமைச்சரவையை நியமித்து, பட்ஜெட்டை தாக்கல் செய்ய வேண்டும் என பிரதமர் செபாஸ்டினுக்கு அதிபர் இம்மானுவேல் மேக்ரான் அறிவுறுத்தி உள்ளார். (ஐ)

## அமெரிக்கா 100% வரி விதித்தால் கடும் நடவடிக்கை: சீனா எச்சரிக்கை



அரியவகை தாதுக்கள்,லிதியம் பேட்டரிகளை கொண்டு சீனாவில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் மீது ஏற்றுமதி கட்டுப்பாடுகளை அந்த நாடு விதித்துள்ளது. இதற்கு பதிலடியாக சீனா மீதான இறக்குமதி வரி கூடுதலாக 100 சதவீதம் விதிக்கப்படும். இது வரும் நவம்பர்1 முதல் அமலுக்கு வரும் என்று அதிபர் டிரம்ப் அறிவித்தார்.

இது குறித்து சீன வர்த்தக அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளதாவது:

அமெரிக்காவின் நடவடிக்கை சீன நலன்களை பாதிக்கிறது.

ஒவ்வொரு முறையும் வரியைக் காட்டி பயமுறுத்தி சீனாவை அணுகுவது சரியானது அல்ல. தங்களுக்கு ஒரு நியாயம், பிறருக்கு ஒரு நியாயம் என்ற நிலையை அமெரிக்கா பின்பற்றுகிறது. அதிக வரிகள் விதிக்கப்படும் என்று வேண்டுமென்றே அச்சுறுத்துவது சீனாவுடன் இணைந்து செயல்பட சரியான வழி அல்ல. தவறான பாதையில் செல்ல அமெரிக்கா தொடர்ந்து வலியுறுத்தினால், சீனா அதன் நியாயமான உரிமைகள் மற்றும் நலன்களைப் பாதுகாக்க உறுதியான நடவடிக்கைகளை எடுக்கும். இவ்வாறு அதில் பதிவிட்டுள்ளார். (ஐ)

## மதுபோதையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஞாயிற்றுக் கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

குடாகல்கமுவ - பெபொல்வெல பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய நபரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் படுகாயமடைந்த நபர் குருநாகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் தனது சகோதரரின் வீட்டில் வேறொரு குழுவுடன் மது அருந்திக் கொண்டிருந்த நிலையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இதன்போது, உயிரிழந்தவரைச் சகோதரர் வாளால் வெட்டிக் கொலை செய்துள்ளார் என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கொலை செய்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சடலம் குருநாகல் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

குருநாகல் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பழனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாகாண சபைத் தேர்தலில் மக்கள் ஆணையை பெறும் நோக்கிலேயே அவர் இந்த முடிவை எடுத்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

கட்சி பிரமுகர்களுடன் இது சம்பந்தமாக அவர் ஆலோசனை நடத்தி வருகின்றார் எனவும், விரைவில் இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளது எனவும் தெரியவருகின்றது

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதிகாரிகள் அவர்களின் சுயலாபத்துக்காகச் செயற்பட்டுக் கொண்டுள்ளனர் எனவும் போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

ஆசிரியர் இடமாற்றக் கொள்கையைச் சரியான முறையில் நடைமுறைப்படுத்துமாறும் அவர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

## மலையகத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த 10,000 தனி வீட்டு திட்டம் என்பது, தமிழ் முற்போக்குக் கூட்டணியினராகிய நாம், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை அழைத்து வந்து, நோர்வூட் நகரில் அவருக்காக நாம் நடத்திய வரவேற்பு நிகழ்வில், அவர்களிடம் கேட்டு பெற்று, அவரது வாயால் இந்திய அரசின் சார்பில் அவர் வழங்கிய உறுதிமொழியின் மூலம், இலங்கை வாழ் மலையக மக்களுக்காக நாம் பெற்று கொடுத்தது ஆகும். இதையே இன்றைய அரசு முன்னெடுக்க முனைவதாக தெரிகிறது. நல்லது. அதற்கு நாம் ஒத்துழைப்பு வழங்க தயாராக உள்ளோம்.

ஆனால், அரசாங்கத்தில் இருக்கும் ஜே.வி.பி. மலைநாட்டு அமைச்சர்கள், எம்.பிக்கள், இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் தாம் அனுபவமற்றவர்கள் என்பதை முழு உலகுக்கே வெளிச்சம் போட்டு காட்டி வருகின்றார்கள்.

அது மட்டும் அல்ல, நாம் ஆரம்பித்த திட்டத்தையே அரைகுறையாக செய்து கொண்டு, எம்மையே மிகவும் தரக்குறைவாக குறை கூறி கொண்டு திரிகிறார்கள்.

இன்று, மலைநாட்டில். தனி வீடு கட்ட காணி அடையாளம் காணபடவில்லை. அந்த காணியில் அடிக்கல் நாட்டு விழா, நடத்த பட வில்லை. புது வீடு கட்டி, புதுமனை புகு விழா, நடத்த பட வில்லை. கட்டி முடிக்க பட்ட வீடுகளுக்கு, நீர், மின்சாரம், வீதி ஆகிய உட்கட்டமைப்பு பணிகள் முடித்து வைக்கபடவில்லை.

ஆனால், விழா நடத்தி, அப்பாவி மக்களையும் ஏமாற்றி உள்ளார்கள். தங்கள் தலைவர், நாட்டு ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவை மலைநாட்டுக்கு அழைத்து வந்து, அவரையும் ஏமாற்றி உள்ளார்கள்.

இது போதாது என்று, இந்த வீட்டு திட்ட செலவில் 90% நிதியை எமக்காக நன்கொடையாக தரும் இந்திய அரசின் தூதரையும் அழைத்து வந்து, அவரது பெயரையும் பயன் படுத்தி, அரசியல் செய்கிறார்கள். தங்கள் இயலாமையை, இந்திய அரசின் மூவர்ண தேசிய கொடியால் மறைக்க முயல்கிறார்கள்.

வரலாற்றில் இதற்கு முன்பு நாம், இந்தய தூதரை அழைத்து வந்து, ஒன்றில், புது வீடுகளுக்கு அடிக்கல் நாட்டி விழா எடுப்போம். அல்லது புது வீடுகளை கட்டி முடித்து, கையளிக்கும் விழா நடத்துவோம்.

ஆனால், இலங்கை வரலாற்றில் முதன் முறையாக, இலங்கைக்கு பாரதம் நன்கொடையாக வழங்கும் இந்திய வீடமைப்பு திட்ட நிகழ்வு ஒன்றில், இந்திய தூதரையும் அழைத்து வந்து, பயனாளிகள் என்று அப்பாவி மக்கள் சிலரையும் அழைத்து வந்து, வெறும் காகிதத்தில், "உங்களுக்கு காணியும், வீடும், தருகிறோம்" என எழுதி கொடுத்து அனுப்பி உள்ளார்கள்.

இவற்றின் மூலம், "பொய் சொல்லவும், தவறு செய்யவும், பயமும், வெட்கமும் இல்லாத மனிதர்கள்" என தம்மை இந்த ஜே.வி.பி. மலைநாட்டு அமைச்சர்கள் நிரூபித்து உள்ளார்கள் - என்றார்.

# "பாலின சமத்துவத்தை முழுமையாக அடையவில்லை"



பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளின் உரிமைகள் மற்றும் நல்வாழ்வை முன்னேற்றுவதற்கும், சமத்துவம் மற்றும் கௌரவம் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்கான கொள்கைகளைச் செயல்பாட்டு ரீதியாகக் கடைப்பிடிப்பதற்குமான தனது உறுதிப்பாட்டை இலங்கை மீண்டும் வலியுறுத்துவதாகப் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

மக்கள் சீனக் குடியரசின் அரசாங்கத்தின் அழைப்பின் பேரில், ஒக்டோபர் 13 ஆம் திகதி பீஜிங்கில் அமைந்துள்ள சீன தேசிய மாநாட்டு மையத்தில் (CNCC) நடைபெற்ற உலகத் தலைவர்களின் பெண்கள் பற்றிய மாநாடு 2025 இன் ஆரம்ப விழாவில் கலந்துகொண்டபோதே பிரதமர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார். தேசிய மாநாட்டு மையத்திற்கு வருகை தந்த பிரதமரை, சீன ஜனாதிபதி ஷீ ஜின்பிங் (Xi Jinping) மற்றும் ஜனாதிபதியின் பாரியார் திருமதி. பெங் லியுவான் (Peng Liyuan) ஆகியோர் வரவேற்றனர்.

ஜனாதிபதி ஷீ ஜின்பிங் அவர்களின் வரவேற்புரையை அடுத்து, பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவின் உரை உட்பட, அரச மற்றும் அரசாங்கத் தலைவர்கள் தமது உரைகளை முன்வைத்தனர்.

மன்றத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய பிரதமர், 1995 ஆம் ஆண்டு பீஜிங்கில் நடைபெற்ற பெண்கள் பற்றிய உலக மாநாட்டினதும், பாலின சமத்துவத்திற்கான ஒரு விரிவான கட்டமைப்பாகிய பீஜிங் செயல்பாட்டுத் தளத்தினதும் மரபை நினைவுகூர்ந்ததோடு, கடந்த மூன்று தசாப்தங்களில் அடையப்பட்ட முன்னேற்றங்கள் பற்றியும் குறிப்பிட்டார்.

குறிப்பாக, பெண் எழுத்தறிவு அதிகரிப்பு, தாய்மாரின் இறப்பு வீதம் கிட்டத்தட்டப் பாதியாகக் குறைந்திருப்பது, மற்றும் ஆயுட்கால அதிகரிப்பு (1995 இல் 69 வயதாக இருந்த ஆயுட்காலம் 2023 இல் 76 வயது வரை அதிகரித்திருக்கின்றது) ஆகியவற்றை சுட்டிக்காட்டினார். அதே நேரத்தில், தொடர்ந்தும் காணப்படுகின்ற இடைவெளிகள் குறித்தும் அவர் கவனத்தைச் செலுத்தினார். ஆண்களுடன் ஒப்பிடுகையில் குறைவான தொழிலாளர் பங்கேற்பு (48.7% - 73%). அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் குறைந்த பிரதிநிதித்துவம் (பட்டதாரிகளில் சுமார் 35%).

பெண்களை விகிதாசார ரீதியில் அதிகமாகப் பாதிக்கும் தொடர்ச்சியான உணவுப் பாதுகாப்பின்மை (ஆண்களை விட 47.8 மில்லியன் அதிகமான பெண்கள் மிதமான அல்லது கடுமையான உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்கொள்கின்றனர்).

மற்றும் அரசியல் சமத்துவத்தை நோக்கிய மெதுவான முன்னேற்றம் ஆகிய குறைபாடுகளை அவர் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு, பெண்களின் ஒட்டுமொத்த அபிவிருத்தி என்பது கல்வி, சுகாதாரம், பொருளாதாரம், அரசியல், சமூகம் மற்றும் கலாசாரம் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு முழுமையான செயல்முறையாகும், ஆகையினால் இதற்கு நமது தொடர்ச்சியான அர்ப்பணிப்பு தேவைப்படுகிறது எனப் பிரதமர் தெரிவித்தார்.

தலைமைத்துவம் மற்றும் தீர்மானங்களை இயற்றுதலில் பெண்களின் பங்கேற்பை அதிகரித்தல், ஒவ்வொரு மட்டத்திலும் அர்த்தமுள்ள பிரதிநிதித்துவத்தை உறுதி செய்தல், CEDAW (பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் நீக்குவதற்கான மாநாடு) மற்றும் ருளேஊசு 1325 (ஐ.நா. பாதுகாப்புச் சபைத் தீர்மானம் 1325) இணங்க பாலின சமத்துவம் மற்றும் பெண்கள் அதிகாரமளித்தல் குறித்த தேசியக் கொள்கை மற்றும் பெண்கள், அமைதி மற்றும் பாதுகாப்பு குறித்த தேசியச் செயல் திட்டத்தை (2023-2027) செயல்படுத்துதல் உள்ளிட்ட இலங்கையின் தேசிய உறுதிப்பாடுகளைப் பிரதமர் வலியுறுத்தினார்.

மேலும், உழைக்கும் வர்க்கம் மற்றும் விளிம்புநிலைச் சமூகங்கள் உட்பட, பல்வேறு சமூகப் பின்னணிகளைக் கொண்ட பெண்கள் அனைத்துத் துறைகளிலும் பிரதிநிதித்துவப்படுத்தப் படுவதை உறுதிசெய்வதில் இலங்கையின் உறுதிப்பாட்டையும் அவர் வலியுறுத்தினார்.

ஆரம்ப விழாவை அடுத்து, ஜனாதிபதி ஷி ஜின்பிங் (ஓ துெனிபை) மற்றும் முதல் பெண்மணி பெங் லியுவான் (Peng Liyuan) ஆகியோர் தேசிய மாநாட்டு மையத்தில் (CNCC) ஏற்பாடு செய்திருந்த உத்தியோகபூர்வ விருந்துபசரிப்பில் பிரதமர் கலந்துகொண்டார்.

# சகோதரருடன் ஏற்பட்ட முறுகல் நிலை– கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை!

குருநாகல், குடா கல்கமுவ பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

பெப்போலேவெல, குடா கல்கமுவ பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய நபரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவது,

குறித்த நபர் தனது சகோதரரின் வீட்டில் வேறொரு குழுவுடன் மது அருந்திக் கொண்டிருந்தார்.

இதன்போது சகோதரருடன் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது. சகோதரருடன் ஏற்பட்ட முறுகல் நிலை தீவிரமடைந்ததில், சகோதரர் அவரை வாளால் தாக்கி கொலை செய்துள்ளார்.

தாக்குதலில் பலத்த காயமடைந்த நபர் குருநாகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை குருநாகல் பொலிஸார் முன்னடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புதிதாக நிறுவப்பட்டுள்ள மேலதிக சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றம்!

புதிய மேலதிக சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றம் நிறுவப்பட்டுள்ளதாக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

கொழும்பு சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றத்தின் செயல்திறனை மேம்படுத்தும் நோக்கில், பிரதம நீதியரசர் பிரீதி பத்மன் சுரசேனவின் அறிவுறுத்தலின் பேரில் இந்த புதிய மேலதிக சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றம் நிறுவப்பட்டுள்ளது. புதிய மேலதிக சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றத்தின் நடவடிக்கைகள் இன்று முதல் ஆரம்பமாவதுடன், அதன் மேல் நீதிமன்ற நீதிபதிகளாக, பிரதம நீதியரசரால், மேல் நீதிமன்ற நீதிபதி ஹசித சமன் பொன்னம்பெரும மற்றும் மேல் நீதிமன்ற நீதிபதி சிந்தக ஸ்ரீநாத் குணசேகர ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை ஆசிரியர் சங்கத்தினரால் முன்னெடுக்கப்பட்ட போராட்டம்!

வட மாகாணத்தில் இலங்கை ஆசிரியர் சங்கம் இன்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளது.

குறித்த போராட்டம் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தின் முன்பாக இடம்பெற்றிருந்தது.

வட மாகாண கல்வித் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்ட இடமாற்றங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உப தலைவர் தீபன் திலீசன் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது தெரிவித்திருந்தார். போராட்டத்தின் போது,

"அடிமைச் சேவகம் புரியும் தொழிலாக ஆசிரியத்தை மாற்றாதே!", "நிறுத்து நிறுத்து அரசியல் தலையீட்டை நிறுத்து"

வடமாகாண கல்வி அமைச்சே உனது மோசடிகளால் குடும்பங்களை சிதைக்காதே"

முதலான பல்வேறு வாசகங்களை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.10.2025 வெளியிடப்பெற்றது.